# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.43/2023

Deposition of witness – PW10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வெங்கடாசலம் | Caste | : | |
| S/o. | : | பழனிசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 27.02.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை;

நான் தற்போது தம்மம்பட்டி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 12.12.2022ம் தேதி மல்லியகரை காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மல்லியகரை காவல்நிலைய குற்ற எண்.91/2022 இதச பிரிவு 294(b), 323, 324, 447, 427, 506(ii) IPC r/w.4 of Woman Harassment Act வழக்கு கோப்பினை தொடர் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் எதிரி மல்லியகரை சந்தைபேட்டையை சேர்ந்த அசோகன்

மகன் செல்வகுமார் என்பவர் அவரது வீட்டில் இருப்பதாக அன்றைய தினம் காலை 9.45 மணிக்கு எனக்கு கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று எதிரி அவரது வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தார். அவருக்கு இவ்வழக்கின் குற்றத்தை எடுத்துக்கூறி காலை 10.00 மணிக்கு கைது செய்து கைது விவரத்தை அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து அதன்பிறகு இவ்வழக்கு குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய ரீப்பர் கட்டையை எதிரி அவரது வீட்டிலிருந்து அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகள் சக்திவேல், மணி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசரில் சக்திவேல், மணியிடம் சாட்சி கையெழுத்து பெற்றேன். சாட்சிகள் சக்திவேல், மணி ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.10 ஆகும். கைப்பற்றப்பட்ட ரீப்பர் கட்டை சா.பொ.1 ஆகும்.

அதன்பிறகு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து, எதிரியை திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்தேன். அதன்பிறகு நீதிமன்ற காவல் அறிக்கை தயார் செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அதன்பிறகு வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் 18.12.2022ம் தேதி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 ஆத்தூர் நீதிமன்றத்தில் ஒப்படைத்து சி.பி எண்.182/2022 பெற்றேன். அதன்பிறகு 23.12.2022ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.ராஜன், மற்றும் வழக்கில் சேதமடைந்த டிவியை சரி செய்த மல்லியரையில் எலக்ட்ரானிக் கடை

வைத்திருந்த உதயகுமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். அதன்பிறகு வழக்கின் வாதியை விசாரித்தபோது முதல் கட்ட விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

மேலும் இவ்வழக்கில் வாதி ஊனமுற்றவர் என்பதால் அவரது புகாரில் போடா நொண்டி பயலே என்று எதிரி அவரை இழிவுபடுத்தி பேசியதால் வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவு 294(b), 323, 324, 447, 427, 506(ii) IPC r/w.4 of Woman Harassment Act r/w.92(b) Rights of person with disabilities Act, 2016 ஆக மாறுதல் செய்து நீதித்துறை நடுவர் எண்.2 ஆத்தூர் நீதிமன்றத்திற்கு சட்டமாறுதல் அறிக்கை அனுப்பி வைத்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும். பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து 23.12.2022ம் தேதி எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், அவரிடமிருந்து எந்த ஒரு சான்று பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் பொய்யான முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் பொய்யாக எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.